(vi) Fஐ X–அச்சிலும், ΔLஐ Y– அச்சிலும் கொண்டு பெறப்படும் வரைபடம் ஆதிப்புள்ளி வழியே செல்லும் ஒரு நேர்கோடாக அமைகிறது.




**F ஐப் பொறுத்து ΔL இன் மாறுபாடு**

(vii) வரைபடத்திலிருந்து சாய்வு $m$ ஆனது,

$$m = \frac{AB}{BC} = \frac{\Delta L}{F} \text{ (or) } \frac{\Delta L}{F}\cdot\frac{AL}{AL}$$

$$\text{(or) } \frac{F}{A} = \left(\frac{L}{Am}\right)\frac{\Delta L}{L}$$

$$\text{(or) } \frac{F}{A} = k\frac{\Delta L}{L}$$

$$\text{(or) } \frac{F}{A} \propto \frac{\Delta L}{L}$$

(viii) அதாவது, தகைவு ∝ திரிவு

(ix) எனவே மீட்சி எல்லையில், தகைவானது திரிபுக்கு நேர்தகவில் இருக்கும். இதுவே ஹூக் விதியாகும்.

**2. மீட்சிக் குணகத்தின் வகைகளை விளக்குக.** *[Jun-2019]*

**மீட்சிக்குணகம் :**

**விடை.** (i) சிறிய உருக்குலைவின் போது, தகைவுக்கும் திரிவுக்கும் உள்ள விகிதம் ஒரு மாறிலி ஆகும். அந்த மாறிலி மீட்சி குணகம் என வரையறுக்கப்படுகிறது.

$$\frac{\text{தகைவு}}{\text{திரிபு}} = \text{மாறிலி} = \text{மீட்சிகுணகம்}$$

(ii) மீட்சி குணகத்தின் அலகு $Nm^{-2}$ (அல்லது) பாஸ்கல்

(iii) மீட்சி குணகங்கள் மூன்று வகைப்படும் அவைகள்,

1) யங் குணகம் (Y)
2) பருமக் குணகம் (K)
3) விறைப்பு குணகம் அல்லது சறுக்கு பெயர்ச்சி குணகம் $(\eta_R)$

**1) யங்குணகம் (Y) :**

(i) இழுவிசை தகைவு அல்லது அமுக்க தகைவுக்கும், இழுவிசை திரிபு அல்லது அமுக்க திரிபுக்கும் இடையேயான விகிதம் யங் குணகம் என வரையறுக்கப்படுகிறது.

(ii) இழுவிசை தகைவு அல்லது அமுக்க தகைவு,

$$\sigma_t = \sigma_t = \frac{F}{A}$$

(iii) இழுவிசை திரிபு அல்லது அமுக்க திரிபு,

$$\varepsilon_t = \varepsilon_t = \frac{\Delta l}{L}$$

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores



$$\frac{V_g}{V_w} = \left(\frac{\rho-\rho_g}{\rho-\rho_w}\right)\frac{\eta_w}{\eta_g}$$

$$= 10\left(\frac{7.8-1.2}{7.8-1}\right)\times\frac{8.5\times10^{-4}}{13.2}$$

$= \mathbf{6.25\ 10^{-4}\ cm/s}$

**12. ஒரு சிறிய துளியின் முற்றுத் திசைவேகம் V, N எண்ணிக்கையுள்ள ஒத்த துளிகள் ஒன்று சேர்ந்து ஒரு பெரிய துளி உண்டாகிறது. எனில் பெரியதுளியின் முற்றுதிசைவேகம் யாது?**

**தீர்வு :** முற்றுத் திசைவேகம் $V = \frac{2}{9}\frac{r^2(\rho-\sigma)g}{\eta}$

$$= \frac{V}{r^2} = \frac{2}{9}\left[\frac{(\rho-\sigma)g}{\eta}\right]$$

$$= \frac{V}{r^2} = \frac{2g}{9\eta}(\rho-\sigma) \quad ...(1)$$

இதைப் போலவே பெரிய துளிக்கு

$$\frac{V'}{R^2} = \frac{2g}{9\eta}(\rho-\sigma) \quad ...(2)$$

சமன் (1) ஐ (2) ஆல் வகுக்க

$$\frac{V}{V'} = \frac{r^2}{R^2}$$

$$V' = V\left(\frac{R}{r}\right)^2$$

N துளிகள் எனில்

ஒரு பெரிய துளியின் பருமன் = N துளிகளின் பருமன்

$$\frac{4}{3}\pi R^3 = N\left(\frac{4}{3}\pi r^3\right)$$

[∵ கோணத்தின் பருமன் $V = \frac{4}{3}\pi r^3$]

$$R^3 = N(r^3)$$

$R^3 = N^{\frac{1}{3}}\, r$ [கனமூலம் எடுக்க]

∴ பெரிய துளியின் முற்றுத் திசைவேகம்

$$= \left(\frac{R}{r}\right)^2 \times V = \left[\frac{\frac{N^{\frac{1}{3}}}{r}}{r}\right]^2 \times V = \left(N^{\frac{1}{3}}\right)^2 \times V$$

$$= N^{\frac{2}{3}} \times V$$

# சிந்தனை வினா

**1. ஒரு பளு W ஆனது கம்பியில் தொங்கவிடப்படும்போது அது 1mm நீட்சி அடைகிறது. கம்பியானது ஒரு கப்பியின் வழியே செல்லும்போது இரு எடைகள் w இரு முனைகளிலும் தொங்கவிடப்பட்டால் கம்பியின் நீட்சி என்னவாக இருக்கும்? மி.மீல் கூறு.**

**தீர்வு:** யங் குணகம் $y = \frac{W}{A}\times\frac{L}{l}$

∴ நீட்சி $l = \frac{WL}{Ay}$

கம்பியின் இரு பக்கங்களிலும் நீட்சி ஆனால் நீளம் $\frac{l}{2}$

∴ இரு பக்கங்களிலும் நீட்சி $= \frac{l}{2}$ mm

உண்டாக்கப்பட்ட மொத்த நீட்சி $= \frac{l}{2} + \frac{l}{2} = 1$ mm

**2. ஒரு உலோகக் கம்பி எடை தொங்கவிடப்பட்டதன் மூலம் நீட்டப்பட்டுள்ளது. $\alpha$ என்பது நீட்சித் திரிபு $y$ என்பது யங்குணகம் எனில் ஓரலகு பருமனுக்கான மீட்சி நிலை ஆற்றல் $\frac{1}{2}y\alpha^2$**

**தீர்வு :** ஓரலகு பருமனின் மீட்சி நிலை ஆற்றல்

$$U = \frac{1}{2} \times \text{தகைவு} \times \text{திரிபு}$$

$$y = \frac{\text{தகைவு}}{\text{திரிபு}} = \frac{\text{தகைவு}}{\alpha}\ ;\ \text{தகைவு} = y\,\alpha$$

$$U = \frac{1}{2}\times y\alpha\times\alpha = \frac{1}{2}y\alpha^2$$

**3. பின்வரும் வரைபடம் 1m ஒரு கம்பியின் நீட்சி $\Delta l$ இதன் ஒரு முனை கூரையிலிருந்து தொங்கவிடப்பட்டுள்ளது. பளு w மறுமுனையில் இணைக்கப்பட்டுள்ளது. கம்பியின் குறுக்குப் பரப்பு $10^{-6}$ m$^2$ கம்பியின் யங்குணத்தைக் கணக்கிடுக.**

**தீர்வு :** $w = 20N$ $\Delta l = 1\times10^{-4}$ m




$$\therefore Y = \frac{F}{A}\cdot\frac{l}{\Delta l} = \frac{w}{A}\cdot\frac{l}{\Delta l}$$

$$= \frac{20}{10^{-6}}\times\frac{1}{1\times10^{-4}}$$

$= 2\times10^{11}$ Nm$^{-2}$

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

# 08 வெப்பமும் வெப்ப இயக்கவியலும்

## கருத்து வரைபடம்






orders@surabooks.com
Ph: 9600175757 / 8124201000
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores
www.TrbTnpsc.Com



**48. செயல்திறன் குணகத்தை வரையறு.**

**விடை.** குளிர்பொருளிலிருந்து பெறப்பட்ட வெப்பத்திற்கு (வெப்ப ஏற்பி) அழுக்கியினால் செய்யப்பட்ட புற வேலைக்கும் (W) உள்ள தகவு செயல்திறன் குணகம் என்று வரையறுக்கப்படுகிறது.

$$COP = \beta = \frac{Q_L}{W}$$

## III. நெடு வினாக்கள்

**1. வெப்பம் மற்றும் வேலையின் உட்பொருளை தகுந்த எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.**

**வெப்பநிலையின் உட்கருத்து :**

**விடை.** (i) வெப்பநிலை என்பது பொருளொன்றின் சூடுத்தன்மை அல்லது குளிர்த்தன்மையைக் குறிப்பதாகும். சூடாக உள்ள பொருளொன்றின் வெப்பநிலை உயர்ந்த மதிப்பைப் பெற்றிருக்கும். இரண்டு பொருள்கள் வெப்பத் தொடர்பில் உள்ளபோது அவைகளுக்கிடையே பாயும் வெப்பத்தின் திசையை வெப்பநிலை தீர்மானிக்கிறது.

வெப்பநிலையின் SI அலகு கெல்வின் (K),

(ii) நடைமுறையில் செல்சியஸ் ($^{o}$C) மற்றும் ஃபாரன்ஹீட் ($^{o}$F) என்ற அளவுகள் பயன்படுத்தப்படுகின்றன. வெப்பநிலைமானியை கொண்டு (Thermometer) பொருளின் வெப்பநிலையை அளந்தறியலாம்.

**வேலையின் உட்கருத்து :**

(i) உங்களின் இரண்டு உள்ளங்கைகளையும் ஒன்றுடன் ஒன்று தேய்க்கும்போது, அவற்றின் வெப்பநிலை உயர்வதை காணலாம். உங்கள் உள்ளங்கைகளின் மீது ஒரு வேலை செய்யப்படுகிறது. அந்த செய்யப்பட்ட வேலையால்தான் வெப்பநிலை உயர்ந்துள்ளது. தற்போது உங்கள் உள்ளங்கைகளை கன்னத்தின் மீது வைக்கும்போது, கன்னத்தின் வெப்பநிலை உயரவதைக் காணலாம்.




**வேலை மற்றும் வெப்பத்திற்கிடையேயான வேறுபாடு**

(ii) ஏனென்றால் உள்ளங்கைகளில் வெப்பநிலை கன்னத்தின் வெப்பநிலையை விட அதிகம். அதனால் வெப்பம் உள்ளங்கையிலிருந்து கன்னத்திற்கு பாய்கிறது. உள்ளங்கைகளின் வெப்பநிலை உயர்ந்தது செய்யப்பட்ட வேலையினால். கன்னத்தின் வெப்பநிலை உயர்ந்தது உள்ளங்கைகளிலிருந்து, கன்னததிற்கு வெப்பம் பரிமாற்றப்பட்டதால் தான்.

(iii) அமைப்பு ஒன்றின் மீது வேலை செய்யப்படும்போது சில நேரங்களில் அமைப்பின் வெப்பநிலை உயரும் அல்லது சில நேரங்களில் அதே நிலையில் நீடிக்கும். வெப்பத்தைப் போன்றே வேலையும் ஒரு அளவு அல்ல. அது ஆற்றலை பரிமாற்றும் ஒரு செயலாகும்.

**2. நல்லியல்பு வாயு விதியை விவரி.** *[Jun-2019]*

**பாயில் விதி, சார்லஸ் விதி மற்றும் நல்லியல்பு வாயு விதி:**

**விடை.** பருமன் V கொண்ட கொள்கலனில் குறைந்த அழுத்தத்தில் (அடர்த்தி) உள்ள வாயு ஒன்றினைக் கொண்டு நிகழ்த்தப்பட்ட சோதனையிலிருந்து பின்வரும் முடிவுகள் கிடைக்கின்றன.

(i) மாறா வெப்பநிலையிலுள்ள வாயு ஒன்றின் அழுத்தம், அதன் பருமனுக்கு எதிர்விகிதத்திலிருக்கும் $\left(P \propto \frac{1}{V}\right)$. இதனை இராபர்ட் பாயில் (Robert Boyle) என்பவர் (1627-1691) கண்டறிந்தார். எனவே இவ்விதி பாயில் விதி என அழைக்கப்படுகிது.

(ii) மாறா அழுத்தத்திலிருந்து வாயு ஒன்றின் பருமன், அதன் வெப்பநிலைக்கு (கெல்வின்) நேர்த்தகவிலிருக்கும் $V \propto T$. இதனை ஜாக்ஸ் சார்லஸ் (Jacques Charles) (1743-1823) என்பவர் கண்டறிந்தார். எனவே இவ்விதி சார்லஸ்விதி என்று அழைக்கப்படுகிறது.

(iii) இவ்விரண்டு விதிகளையும் ஒன்றிணைக்கும் போது பின்வரும் சமன்பாடு கிடைக்கும்.
$PV = CT$ இங்கு C என்பது நேர்க்குறி கொண்ட மாறிலியாகும்.

(iv) இந்த நேர்க்குறி மாறிலி C கொள்கலனிலுள்ள துகள்களின் எண்ணிக்கைக்கு நேர்விகிதத்தில் இருக்கும். ஒத்த பருமன் V, அழுத்தம் P மற்றும் வெப்பநிலை T, கொண்ட ஒரே வகையான வாயுவால் இவ்விரண்டு கொள்கலன்களும் நிரப்பப்பட்டுள்ளன என்க. இரண்டு கொள்கலனிலும் உள்ள வாயு மேலே குறிப்பிட்டுள்ள $PV = CT$ என்ற சமன்பாட்டின்படி செயல்படும். இவ்விரண்டு தனித்தனியான கொள்கலனையும் ஒரே அமைப்பாகக் கருதினால் அவ்வாயுவின் அழுத்தம் மற்றும் வெப்பநிலை ஒரே மதிப்பினைப் பெறும், ஆனால் பருமனும் மற்றும் வெப்பநிலை துகள்களின் எண்ணிக்கையும் இரண்டு மடங்காகும்.

orders@surabooks.com
Ph: 9600175757 / 8124201000
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores



**சிறுவினாக்கள்:** **3 மதிப்பெண்கள்**

**1. திடப்பொருள்களின் நீள் விரிவு பற்றி விளக்குக.** *(Mar.-2019)*

**விடை.** வெப்ப நிலை உயர்வால் பொருள்களின் நீளத்தில் ஏற்படும் அதிகரிப்பே நீள்விரிவு எனப்படும்.



(a) நீள விரிவு

திடப்பொருள்கள் $\Delta T$ என்ற சிறு வெப்பநிலை மாற்றத்தால் நீளத்தில் ஏற்படும் சிறு மாற்றம் $\frac{\Delta L}{L}$ யானது $\Delta T$ க்கு நேர்விகிதத்தில் இருக்கும்.

$$\frac{\Delta L}{L} = \alpha_L \Delta T$$

எனவே, $\alpha_L = \frac{\Delta L}{L\Delta T}$

இங்கு, $\alpha_L$ = நீள் விரிவுக்குணகம்.

$\Delta L$ = நீளத்தில் ஏற்படும் மாற்றம்

$L$ = தொடக்க நீளம்

$\Delta L$ = வெப்பநிலையில் ஏற்பட்ட மாற்றம்.

## கூடுதல் வினாக்கள்

**I. சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக:**

**1 மதிப்பெண்**

**1. வாயு மாறிலி R என்பது _____ இன் இரு தன் வெப்பங்களின்**

(a) விகிதம் (b) கூடுதல்
(c) பெருக்கம் (d) வேறுபாடு

**[விடை. (d) வேறுபாடு]**

**2. தனிசுழி வெப்பநிலை**

(a) 273 K (b) – 273 K
(c) – 273°C (d) 273°C

**[விடை. (c) – 273°C]**

**3. நீரின் தன்வெப்ப ஏற்புத்திறன்**

(a) 1.817 (b) 2512
(c) 4.187 (d) ஏதுமில்லை

**[விடை. (c) 4.187]**

**4. பொது வாயு மாறிலி**

(a) $C_p / C_v$ (b) $C_p - C_v$
(c) $C_p + C_v$ (d) $C_v / C_p$

**[விடை. (b) $C_p - C_v$]**

**5. பின்வருவனவற்றில் வெப்பநிலை மாறா நிகழ்வில் எது உண்மை?**

(a) $\Delta T > 0$ (b) $\Delta V = 0$
(c) $\Delta Q = \Delta W$ (d) PV = மாறிலி

**[விடை. (c) $\Delta Q = \Delta W$]**

**6. பாயிலின் வெப்பநிலையில்**

(a) ஜுல் விளைவு நேர்க்குறி
(b) வாண்டர்வால்ஸ் சமன்பாடு
(c) வாயு பாயில் விதிக்குட்ப்பட்டது
(d) ஏதுமில்லை

**[விடை. (c) வாயு பாயில் விதிக்குட்ப்பட்டது]**

**7. வெப்ப இயக்கவியலின் முதல்விதி இதனுடன் தொடர்புடையது.**

(a) ஆற்றல் மாற்றமின்மை
(b) வெப்பப்பொருளிலிருந்து குளிர் பொருளிலிருக்கு வெப்பம் பாய்தல்
(c) கோண உந்த அழிவின்மை விதி
(d) நியூட்டனின் குளிர்வு விதி

**[விடை. (a) ஆற்றல் மாற்றமின்மை]**

**8. ஒரு மோல் வாயுவின் சராசரி இயக்க ஆற்றல்.**

(a) $\frac{1}{2}KT$ (b) $\frac{3}{2}KT$
(c) $\frac{3}{2}RT$ (d) $\frac{1}{2}RT$

**[விடை. (d) $\frac{1}{2}$ RT]**

**9. ஓர் அணு வாயுவில் நிலையான பருமனில் தன்வெப்பத்திற்கான வரைபடம்.**

(a) 


(b) 


(c) 


(d) 


**[விடை. (c)** 

**]**

www.Padasalai.Net
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores
www.TrbTnpsc.Com

# 09 வாயுக்களின் இயக்கவியற் கொள்கை

## கருத்து வரைபடம்






orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores



## பயிற்சி வினாக்கள்

**I. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:**

**1.** ***m*** **நிறைகொண்ட பந்து ஒன்று** ***u*** **வேகத்துடன் x அச்சைப்பொருத்து 60° கோணத்தில் சென்று சுவரொன்றின் மீது மீட்சி மோதலை ஏற்படுத்துகிறது x மற்றும் y திசையில் அப்பந்தின் உந்தமாறுபாடு என்ன?**



(a) $\Delta p_x = -mu, \Delta p_y = 0$
(b) $\Delta p_x = -2mu, \Delta p_y = 0$
(c) $\Delta p_x = 0, \Delta p_y = mu$
(d) $\Delta p_x = mu, \Delta p_y = 0$

**[விடை. (a) $\Delta p_x = -mu, \Delta p_y = 0$]**

**2. நல்லியல்பு வாயு ஒன்று சமநிலையில் உள்ளபோது பின்வரும் அளவுகளில் எதன் மதிப்பு சுழியாகும்?**

(a) rms வேகம்
(b) சராசரி வேகம்
(c) சராசரித் திசைவேகம்
(d) மிகவும் சாத்தியமான வேகம்

**[விடை. (c) சராசரித் திசைவேகம்]**

**3. மாறா அழுத்தத்திலுள்ள நல்லியல்பு வாயு ஒன்றின் வெப்பநிலையை 100 K லிருந்து 10000 K க்கு உயர்த்தும்போது, அதன் சராசரி இருமடிமூல வேகம் $v_{rms}$ எவ்வாறு மாறுபடும்?**

(a) 5 மடங்கு அதிகரிக்கும்
(b) 10 மடங்கு அதிகரிக்கும்
(c) மாறாது
(d) 7 மடங்கு அதிகரிக்கும்

**[விடை. (b) 10 மடங்கு அதிகரிக்கும்]**

**4. ஒரு திறந்த கதவின் மூலம் இணைக்கப்பட்ட, முழுவதும் ஒத்த அளவுள்ள A மற்றும் B என்ற இரண்டு அறைகள் உள்ளன. குளிர் சாதன வசதியுள்ள A அறையின் வெப்பநிலை B அறையைவிட 4°C குறைவாக உள்ளது. எந்த அறையிலுள்ள காற்றின் அளவு அதிகமாக இருக்கும்?**

(a) அறை A
(b) அறை B
(c) இரண்டு அறைகளிலும் ஒரே அளவுள்ள காற்று இருக்கும்.
(d) கண்டறிய இயலாது

**[விடை. (a) அறை A]**

**5. வாயு மூலக்கூறுகளின் சராசரி இடப்பெயர்வு இயக்க ஆற்றல் பின்வருவனவற்றுள் எதனைச் சார்ந்தது?**

(a) மோல்களின் எண்ணிக்கை மற்றும் வெப்பநிலை
(b) வெப்பநிலையை மட்டும்
(c) அழுத்தம் மற்றும் வெப்பநிலை
(d) அழுத்தத்தை மட்டும்.

**[விடை. (a) மோல்களின் எண்ணிக்கை மற்றும் வெப்பநிலை]**

**6. நல்லியல்பு வாயு ஒன்றின் அகஆற்றல் U மற்றும் பருமன் V ஆகியவை இருமடங்காக்கப்பட்டால், அவ்வாயுவின் அழுத்தம் என்னவாகும்?**

(a) இருமடங்காகும்
(b) மாறாது
(c) பாதியாகக் குறையும்
(d) நான்கு மடங்கு அதிகரிக்கும்

**[விடை. (b) மாறாது]**

**7. 8 g ஹீலியம் மற்றும் 16 g ஆக்ஸிஜன் உள்ள வாயுக்கலவையின் $\gamma = \frac{C_p}{C_v}$ மதிப்பு என்ன?**
[Physics Olympiad - 2005] *[Jun-2019]*

(a) 23/15 (b) 15/23
(c) 27/17 (d) 17/27

**[விடை. (c) 27/17]**

**8. கொள்கலம் ஒன்றில் ஒரு மோல் அளவுள்ள நல்லியல்பு வாயு உள்ளது. ஒவ்வொரு மூலக்கூறின் சுதந்திர இயக்கக்கூறுகளின் எண்ணிக்கையும் $f$ எனில், $\gamma = \frac{C_p}{C_v}$ யின் மதிப்பு என்ன?**

(a) $f$ (b) $\frac{f}{2}$
(c) $\frac{f}{f+2}$ (d) $\frac{f+2}{f}$

**[விடை. (d) $\frac{f+2}{f}$ ]**

**9. வாயு ஒன்றின் வெப்பநிலை மற்றும் அழுத்தத்தை இருமடங்காக்கும்போது, அவ்வாயு மூலக்கூறுகளின் சராசரி மோதலிடைத்தூரம் எவ்வாறு மாறுபடும்?**

(a) மாறாது
(b) இருமடங்காகும்
(c) மும்மடங்காகும்
(d) நான்கு மடங்காகும். **[விடை. (a) மாறாது]**

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores



## சிந்தனை வினாக்கள்

**1. சமையல் எரிவாயு கலன்கள் ஒரு சீரான வேகத்தில் இயங்கும் லாரியில் வைக்கப்பட்டுள்ளது. உள்ளேயுள்ள வாயு மூலக்கூறுகளின் வெப்பநிலையில் ஏற்படும் நிகழ்வு யாது?**

**விடை.** லாரியானது சீரான வேகத்தில் செல்லும்போது அதன் வாயு மூலக்கூறுகளின் இடம் பெயர்வு இயக்கத்தில் எவ்வித பாதிப்பும் இருக்காது. ஆகையால், வாயு மூலக்கூறுகளின் வெப்ப நிலையும் மாறாது.

**2. இயக்கவியற்கொள்கை என்பது யாது? இது ஏன் பயன்படுத்தப்படுகிறது**

**விடை.** இயக்கவியற்கொள்கை சில அனுமானங்களை அடிப்படையாகக் கொண்டது. ஏனெனில் இவ்வனுமானங்கள் கணக்கீடுகளை எளிமைப்படுத்தும். இவை மிகச் சரியாக இல்லை என்றாலும் இதன் அடிப்படையில் அமைந்த இயக்கவியற்கொள்கையை நாம் அனைத்து வாயுக்களுக்கும் பயன்படுத்த முடியும்.

**3. விரல்களை நீர்ப்பரப்பில் வைக்கும்போது குறுக்கு நெடுக்கான இயக்கம் நடைபெறுவதில்லை ஏன்?**

**விடை.** நமது விரல்களின் நிறை நீர் மூலக்கூறுகளுடன் ஒப்பிடும்போது மிக அதிகம், எனவே மூலக்கூறு மோதல்களில் ஏற்படும் உந்தப்பரிமாற்றம் விரல்களை நகர்த்துவதற்கு போதுமானதல்ல.

**4. வாயு மூலக்கூறுகளால் ஏற்படும் அழுத்தம் சார்ந்திருக்கும் காரணிகளை விளக்குக?**

**விடை. (i) எண்ணடர்த்தி :** $\left(n=\dfrac{N}{V}\right)$

எண்ணடர்த்தி அதிகரிக்கும்போது, வாயுவின் அழுத்தமும் அதிகரிக்கும். எடுத்துக்காட்டாக சைக்கிள் அல்லது காரின் சக்கரத்திற்கு காற்றை நிரப்பும்போது நாம் எண்ணடர்த்தியை அதிகரிக்கிறோம். அதனைத் தொடர்ந்து அழுத்தமும் அதிகரிக்கிறது.

**(ii) வாயு மூலக்கூறின் நிறை :**

வாயு மூலக்கூறு சுவரின் மீது செலுத்தும் உந்தத்தின் விளைவாக அழுத்தம் ஏற்படுகிறது. ஒரு நிலையான வேகத்தில், அதிக நிறையுள்ள மூலக்கூறு அதிக உந்தத்தைக் கொடுக்கும். எனவே வாயு மூலக்கூறின் நிறை அதிகரிக்கும்போது அழுத்தமும் அதிகரிக்கும்.

**(iii) சராசரி இருமடி வேகம் :**

நிறையை மாறிலியாக எடுத்துக்கொண்டு வாயு மூலக்கூறின் வேகத்தை அதிகரித்தால் அதன் சராசரி வேகமும் அதிகரிக்கும். இதன் பயனாக அழுத்தமும் அதிகரிக்கும்.

**5. வாயு மூலக்கூறுகளால் ஏற்படும் அழுத்தம் சார்ந்திருக்கும் காரணிகளை விளக்குக?**

**விடை. (i) எண்ணடர்த்தி :** $\left(n=\dfrac{N}{V}\right)$

எண்ணடர்த்தி அதிகரிக்கும்போது, வாயுவின் அழுத்தமும் அதிகரிக்கும். எடுத்துக்காட்டாக சைக்கிள் அல்லது காரின் சக்கரத்திற்கு காற்றை நிரப்பும்போது நாம் எண்ணடர்த்தியை அதிகரிக்கிறோம். அதனைத் தொடர்ந்து அழுத்தமும் அதிகரிக்கிறது.

**(ii) வாயு மூலக்கூறின் நிறை :**

வாயு மூலக்கூறு சுவரின் மீது செலுத்தும் உந்தத்தின் விளைவாக அழுத்தம் ஏற்படுகிறது. ஒரு நிலையான வேகத்தில், அதிக நிறையுள்ள மூலக்கூறு அதிக உந்தத்தைக் கொடுக்கும். எனவே வாயு மூலக்கூறின் நிறை அதிகரிக்கும்போது அழுத்தமும் அதிகரிக்கும்.

**(iii) சராசரி இருமடி வேகம் :**

நிறையை மாறிலியாக எடுத்துக்கொண்டு வாயு மூலக்கூறின் வேகத்தை அதிகரித்தால் அதன் சராசரி வேகமும் அதிகரிக்கும். இதன் பயனாக அழுத்தமும் அதிகரிக்கும்.

**6. ஒரு ஆர்கன் வாயுவில் உள்ள அணுவின் வேகம், ஹீலியம் வாயு அணுவின் rms வேகத்திற்கு சமமாக உள்ளது. வெப்பநிலை –20ºC. [அணுவின் நிறை Ar = 39.90, He = 4.04] எனில் ஆர்கன் அணுவின் வெப்பநிலை யாது?**

**தீர்வு :**

ஹீலியம் அணுவின் வெப்பநிலை,

$T_{He}$ = –20°C = 273 – 20 = 253 K.

ஆர்கனின் அணுநிறை, $M_{Ar} = 39.90$

ஹீலியத்தின் அணு நிறை, $M_{He} = 4.04$.

$(v_{rms})_{Ar}$ = ஆர்கனின் rms வேகம்,

$(v_{rms})_{He}$ = ஹீலியத்தின் rms வேகம்.

ஆர்கனின் rms:

$$(v_{rms})_{Ar} = \sqrt{\frac{3RT_{Ar}}{M_{Ar}}} \qquad (1)$$

$$(v_{rms})_{He} = \sqrt{\frac{3RT_{He}}{M_{He}}} \qquad (2)$$

$$(v_{rms})_{Ar} = (v_{rms})_{He}$$


Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores
www.TrbTnpsc.Com

# 10 அலைவுகள்

## கருத்து வரைபடம்






orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores



(iv) **திணிப்பு அதிர்வுகள் :** எந்த ஒரு அலையியற்றி, தான் இழந்த ஆற்றலை புறச்சீரலைவு அமைப்பினால் பெற்று தொடர்ந்து இயங்குகின்றதோ அந்த அலையியற்றியை திணிப்பு அலையியற்றி அல்லது இயக்கப்பட்ட அலையியற்றி என அழைக்கின்றோம்.

**எடுத்துக்காட்டு :** இழுத்துக் கட்டப்பட்ட ஒலிப்பானிலிருந்து பெறப்படும் அதிர்வுகள்.

## IV. எண்ணியல் கணக்குகள்

**1. புவியை சமச்சீரான R ஆரமுடைய கோளகப் பொருளாக கருதி, அதன் மையத்தின் வழியே நேராக துளையிடப்படுகிறது. அத்துளையில் தானாக விழும். ஒரு துகள் சீரிசை இயக்கத்தை மேற்கொள்ளும் எனவும் அதன் அலைவு நேரம் $T = 2\pi\sqrt{\frac{R}{g}}$ எனவும் காட்டுக.**

**தீர்வு:** புவியை ஒரு கோளகப் பொருளாகக் கருதினால் அதன் மையம் = O

ஆரம் = R ; மையத்தின் வழியே துளையிடப்படுகிறது.

புவியின் பரப்பின் மீது முடுக்கம் = $g$

துளையின் வழியே போடப்படும் பொருளின் நிறை = $m$

புவியின் உள்ளே $t$ நேரத்திற்குப் பின் அடையும் ஆழம் = $d$

$g$ ன் மதிப்பு துகளின் வெளிக் கடத்தலைப் பொருத்து குறைகிறது.

$\therefore$ துகள் கடகும்போது ஈர்ப்பு முடுக்கம் = $g'$

$$g' = g\left(1 - \frac{d}{R}\right) = g\left(\frac{R-d}{R}\right) \quad \ldots (1)$$

புவியின் மையத்திலிருந்து தொலைவு $y$ = ஆரம் – தொலைவு

$y$ யின் மதிப்பை பிரதியிட $g' = g\frac{y}{R}$

புதிய ஈர்ப்பு முடுக்கத்தால் $m$ நிறையுடைய பொருளின் மீதான விசை

$$F = mg' = mg\frac{y}{R}$$

ஆரம் × தொலைவு மற்றும் விசை அனைத்தும் சராசரி நிலை o நோக்கி இருக்கும்.

துகள் துளையின் வழியே போகும்போது செயல்படுத்தப்படும் சீரிசை இயக்கம்

சுருள்வில் காரணி $k = mg/$ஆரம்

$$T = 2\pi\sqrt{\frac{\text{நிலைமக்காரணி}}{\text{சுருள்வில் காரணி}}} = 2\pi\sqrt{\frac{M}{\frac{mg}{R}}}$$

$$= 2\pi\sqrt{\frac{R}{g}}$$

**2. கிடைத்தளத்துடன் 45° கோணம் ஏற்படுத்தும் சாய்தளத்தில் வைக்கப்பட்டுள்ள உருளும் டிராலியில் $l$ = 0.9m நீளமுள்ள தனி ஊசல் முறையாக பொருத்தப்பட்டுள்ளதாக கொள்வோம். சாய்தளமானது உராய்வற்றது எனில் தனிஊசலின் அலைவுக் காலத்தை கணக்கிடுக.**

**தீர்வு:** தனிஊசலின் நீளம் $l$ = 0.9m

கிடைமட்டத்தளத்துடன் சாய்வு கோணம் $\alpha = 45°$

தனிஊசலின் அலைவு காலம் T = ?

$$T = 2\pi\sqrt{\frac{l}{g\cos\alpha}}$$

$$= 2 \times 3.14\sqrt{\frac{0.9}{9.8\times\cos 45^\circ}}$$

$$= 2 \times 3.14\sqrt{\frac{0.9}{9.8\times 0.7071}}$$

$$T = 2.2635$$

**3. ρ அடர்த்தி கொண்ட திரவத்தின் மீது $m$ நிறைகொண்ட மரக்கட்டை மிதந்து கொண்டிருக்கிறது. அக்கட்டை இலேசாக கீழ்நோக்கி அமுக்கப்பட்டு விடப்படும்போது சீரிசை இயக்கத்தை மேற்கொள்கிறது. அதன் அலைவு நேரம் $T = 2\pi\sqrt{\frac{m}{A g\rho}}$ எனக் காட்டுக.**

**தீர்வு.**

திரவத்தின் சுருள் காரணி $= \rho g = A\rho g$

மரக்கட்டையின் நிலைமக் காரணி $= m$

அலைவு காலம் $T = 2\pi\sqrt{\frac{\text{நிலைமக்காரணி}}{\text{சுருள் காரணி}}}$

$$= 2\pi\sqrt{\frac{m}{Ag\rho}}$$

**4. ஒத்த அதிர்வெண்ணும் வெவ்வேறான வீச்சுகளும் கொண்ட இரு சீரிசை இயக்கங்கள் $x$ மற்றும் $y$ அச்சுகளின் வழியே $x = A\ sin\ (\omega t + \varphi)$ ($x$ அச்சின் வழியாக) மற்றும் $y = B\sin\omega t$ ($y$ அச்சின் வழியாக) என்ற வீச்சுகளுடன் இயக்கமடைகிறது எனக் கொள்க.**

$\frac{x^2}{A^2} + \frac{y^2}{B^2} - \frac{2xy}{AB}\cos\varphi = \sin^2\varphi$ **எனக் காட்டுக.**

(a) $\varphi = 0$ (b) $\varphi = \pi$

(c) $\varphi = \frac{\pi}{2}$ (d) $\varphi = \frac{\pi}{2}$ மற்றும் A = B

(e) $\varphi = \frac{\pi}{4}$ **ஆகிய சிறப்பு நிகழ்வுகளையும் விவாதிக்க.**

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net
This is only for Sample
www.TrbTnpsc.Com
for Full Book order Online and Available at All Leading Bookstores

# 11 அலைகள்

## கருத்து வரைபடம்






orders@surabooks.com
Ph: 9600175757 / 8124201000
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores



**அன்றாட வாழ்வில் ஒலியின் எதிரொலிப்புக்கான பொதுவான எடுத்துக்காட்டுகள்**




**வளைவு பரப்புகளில் ஒலியின் எதிரொலிப்பு**

(i) ஒலியின் பண்பு எதிரொலிக்கப்பட்ட பரப்பையும் பொருத்தது.

(ii) பரவளைய எதிரொலிப்பான்கள் (வளைவு எதிரொலிப்பான்) ஒலி அலைகளை குறிப்பிட்ட புள்ளியில் குவிப்பதற்காக வடிவமைக்கப்படுகின்றன. இவை, அதிக திசை பண்புடைய நுண்ணிய ஒலிப்பான்களை (microphones) வடிவமைக்கப் பயன்படுகின்றன.




**பெரிய கலையரங்கங்களில் ஒலி**

(iii) எந்த ஒரு பரப்பும் (வழுவழுப்பானது அல்லது சொர சொரப்பானது) ஒலியை உட்கவரும். என நாம் அறிவோம். **எடுத்துக்காட்டாக** பெரிய அலைகள் அல்லது கலையரங்கங்கள் அல்லது திரையரங்குகள் ஆகியவற்றில் ஏற்படுத்தப்படும் ஒலி அதன் சுவர்கள், மேற்கூரைகள், தரை மற்றும் இருக்கைகளால் பெரிதும் உட்கவரப்படுகிறது.

(iv) இந்த இழப்பை தடுக்க, வளைவு ஒலி பரப்புகள் (குழி பரப்புகள்) ஒலிப்பான் முன்பாக அமைக்கப்படுகின்றன. இவை ஒலிப்பானிலிருந்து வரும் ஒலியை கேட்போர் கூட்டம் (audience) நோக்கி எதிரொலிக்கின்றன.

**6. மேற்பொருத்துதல் தத்துவத்தை விளக்குக.**

**விடை. மேற்பொருத்துதல் தத்துவம்:**

(i) ஒரு முனையில் கட்டப்பட்ட கம்பியின் ஒரு முனையை சட்டென்று மேல் இழுத்துவிட்டால், அலைத்துடிப்பு ஏற்படும். மேலும் அது கம்பியில் முன்னேறிச் செல்கிறது.

(ii) மாறாக கம்பியின் இருமுனையையும் இருவர் பிடித்துக்கொண்டு, இருவரும் ஒரே கணத்தில் அம்முனைகளை சட்டென்று மேல் இழுத்து விட்டால், இரண்டு அலைத்துடிப்புகள் ஒன்றை நோக்கி ஒன்று நகர்ந்து, ஒரு புள்ளியில் சந்தித்து, அப்புள்ளியை கடந்து அதே வடிவில் செல்லும்.

(iii) ஆனால், குறுக்கிடும் புள்ளியில் மட்டும் அவற்றின் பண்பு முழுவதும் மாறுபட்டு, படத்தில் காட்டியவாறு குறுக்கிடும் துடிப்புகள் ஒரே வடிவம் பெற்றுள்ளனவா அல்லது எதிர்வடிவம் பெற்றுள்ளனவா என்பதைப் பொறுத்து அமையும்.



**இரு அலைகளின் மேற்பொருத்துதல்**

(iv) ஒரே வடிவம் கொண்ட துடிப்புகள், குறுக்கிடும் போது தொகுபயன் இடப்பெயர்ச்சி, தனிப்பட்ட இடப்பெயர்ச்சிகளின் கூடுதலாக அமைவதால், அங்கு வீச்சு, தனிப்பட்ட இருதுடிப்புகளின் வீச்சுகளை விட அதிகமாக இருக்கும். அதே நேரத்தில் இரு துடிப்புகளின் வீச்சுகள் சமமாக இருந்து, ஆனால் வடிவங்கள் $180^{o}$ எதிர்கட்டத்தில் குறுக்கிட்டால், வீச்சுகள் ஒன்றையொன்று அழித்துக் கொண்டும், அப்புள்ளியைக் கடந்த பிறகே அதே வடிவத்தை மீண்டும் பெற்று எதிர் எதிராக முன்னேறுகின்றன.

(v) அலைகள் மட்டுமே இதுபோன்ற ஆச்சரியப்படும் பண்பை பெற்றுள்ளன. இந்நிகழ்வை நாம் மேற்பொருந்துதல் தத்துவம் என்கிறோம். அலைகள் குறுக்கிடும்போது ஏற்படும் தொகுபயன் பண்புகளை மேற்பொருத்துதல் தத்துவம் விளக்குகிறது.

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores



**4. காலியான அறையில் ஒரு ஒலி உரப்பாகுவும் (louder) அதே ஒலி தட்டு முட்டுப் பொருள்கள், இருக்கைகள் உள்ள அறையில் உரப்பு குறைவாகவும் இருக்க காரணம் என்ன?**

விடை. ஒலி என்பது ஒரு ஆற்றல் வடிவம். தட்டுமுட்டுப் பொருள்கள் இருக்கைகள் போன்றவை தடைகளாக செயல்பட்டு ஆற்றலின் பெருப் பகுதியை உட்கவரும். எனவே ஒலியின் செறிவு தாழ்வடையும். ஆனால் காலியான அறையில் ஒலியின் செறிவு தடை ஏதுமில்லாததால் ஒலியின் செறிவு முன்னர் நிகழ்வினை ஒத்ததாக இருந்தபோதிலும் ஒலியின் அளவு அதிகமாக உணரப்படுகிறது.

**5. சூறாவளி, கொந்தளிப்பு, புயல் ஆகியவை வரவிருப்பதை விலங்குகள் எவ்வாறு முன்கூட்டியே உணர்கின்றன?**

விடை. சில விலங்குகள் தாழ் அதிர்வெண் ஒலி அலைகளை வெளியிடக்கூடிய சூறாவளிகளை நுட்புலத்தால் உணரக்கூடியன. காற்றிலுள்ள ஈரப்பதத்தையும், நீரின் அழுத்தத்தையும், உணர்ந்து அதற்கேற்றவாறு செயல்படும்.

**6. நீர்வரும் திறந்த குழாயின் அடியில் வைக்கப்பட்ட பாத்திரம் ஒன்று நிரம்ப இருப்பதை எவ்வாறு சற்று முன்னரே அறிய முடியுமா? காரணம் தருக?**

விடை. காற்றத் தம்பத்தால் உருவாகும் கனுவின் அதிர்வெண் அதன் நீளத்திற்கு எதிர்விகிதத்தில் இருக்கும். பாத்திரத்தில் நீரின் மட்டம் உயரும்போது அதன் மீதான காற்றுத்தம்பம் குறைவடையும். இது அதிர்வெண் குறை ஒலியை உண்டாக்கும். எனவே, ஒலி குறைவாகும். ஒலி வேறுபட்டால் பாத்திரமானது நீரால் கூடிய சீக்கிரமே நிரப்பப்படும் என தெரிய வருகிறது.

## அரசு தேர்வு வினா – விடைகள்

**சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக:**

**1 மதிப்பெண்**

**1. கீழ் குறிப்பிட்டவற்றில் எது அலையைக் குறிக்கிறது? [அ] அலையைக் குறிக்கும் சமன்பாடு** *[Mar., HY-2019]*

(a) $\frac{1}{x+vt}$ (b) $\sin(x+vt)$

(c) $(x-vt)^3$ (d) $x(x+vt$

**[விடை. (b) $\sin(x+vt)$]**

**2. நீரில் செல்லும் ஒரு மோட்டார் படகு உருவாக்கும் அலை** *[HY-2019]*

(a) குறுக்கலை (b) நெட்டலை

(c) நிலையலைகள்

(d) நெட்டலை மற்றும் குறுக்கலை

**[விடை. (d) நெட்டலை மற்றும் குறுக்கலை]**

**குறுவினாக்கள்: 2 மதிப்பெண்கள்**

**1. குறுக்கலை மற்றும் நெட்டலைகளுக்கு இடையே உள்ள இரண்டு வேறுபாட்டை எழுதுக.** *[HY-2019]*

| வ. எண் | குறுக்கலைகள் | நெட்டலைகள் |
|---|---|---|
| 1. | ஊடகத்தின் துகள்கள் அதிர்வடையும் திசை, அலைகள் பரவும் திசைக்கு செங்குத்தாக உள்ளது | ஊடகத்தின் துகள்கள் அதிர்வடையும் திசை, அலைகள் பரவும் திசைக்கு இணையாக உள்ளது |
| 2. | மாறுபாடுகளானது அகடுகள் மற்றும் முகடுகள் வடிவில் உள்ளன | மாறுபாடுகளானது இறுக்கங்கள் மற்றும் தளர்ச்சிகள் வடிவில் உள்ளன |
| 3. | மீட்சி ஊடகத்தில் குறுக்கலைகள் பரவ இயலும் | அனைத்து வகை ஊடகத்திலும் (திடம், திரவம் மற்றும் வாயு) நெட்டலைகள் பரவ இயலும் |

**சிறுவினாக்கள்: 3 மதிப்பெண்கள்**

**1. 396 ms$^{-1}$ என்ற திசைவேகத்தில் செல்லும், 99cm மற்றும் 100cm அலைநீளங்களை கொண்ட அலைகள் குறுக்கீட்டு விளைவிற்கு உட்படும் போது ஒரு வினாடியில் ஏற்படும் விம்மல்களின் எண்ணிக்கையை கணக்கிடுக.** *(Mar.-2019)*

**தீர்வு:** $V = \lambda f$

$$f = \frac{v}{\lambda}$$

$$f_1 = \frac{v}{\lambda_1} = \frac{396}{0.99} = 400 \text{ Hz.}$$

$$f_2 = \frac{v}{\lambda_2} = \frac{396}{1} = 396 \text{ Hz.}$$

$n = f_2 - f_1 = 400 - 396 = 4$ விம்மல்கள்/ வினாடி.

**2. ஒலி எதிரொலிப்பின் பயன்களை விவரிக்கவும்.** *[Jun-2019]*

விடை. **ஒலியின் எதிரொலிப்பின் பயன்கள் :**

**இதயத்துடிப்புமானி**

இது ஒலியின் பன்மடங்கான எதிரொலிப்பின் தத்துவத்தில் இயங்குகிறது.




இதயத்துடிப்புமானி, மற்றும் அதன் ரப்பர் குழாயில் பன்மடங்கு எதிரொலிப்பு அடையும் இதயத்துடிப்பு

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores

# இயற்பியல்

## மேல்நிலை – முதலாம் ஆண்டு

## செய்முறைப் பயிற்சிகள்

## பொருளடக்கம்


| எண். | | பக்க எண். |
|---|---|---|
| 1. | தெரிந்த நிறை கொண்ட ஒரு திண்மக் கோளத்தின் நிலைமத் திருப்புத் திறனை வெர்னியர் அளவியைப் பயன்படுத்திக் காணல். | 404 |
| 2. | சீரற்ற வளைவு-ஊசி மற்றும் நுண்ணோக்கியைப் பயன்படுத்தி பளுவிற்கும் இறக்கத்திற்கும் இடையேயான தொடர்பைச் சரிபார்த்தல். | 406 |
| 3. | சுருள்வில்லின் சுருள் மாறிலியைக் காணல். | 409 |
| 4. | தனி ஊசலைப் பயன்படுத்தி புவிஈர்ப்பு முடுக்கம் காணல். | 412 |
| 5. | ஒத்ததிர்வு காற்றுத் தம்பத்தை பயன்படுத்தி காற்றில் ஒலியின் திசைவேகம் காணல். | 415 |
| 6. | திரவத்தின் பாகுநிலையைக் காணல் (ஸ்டோக்ஸ் முறை). | 417 |
| 7. | நுண்புழை ஏற்ற முறையில் பரப்பு இழுவிசை காணல். | 419 |
| 8. | கலோரிமானியைக் கொண்டு நியூட்டனின் குளிர்வு விதியை சரிபார்த்தல். | 422 |
| 9. | மாறா இழுவிசையில் அதிர்வெண்ணிற்கும் கொடுக்கப்பட்ட கம்பியின் அதிர்வடையும் நீளத்திற்கும் இடையேயான தொடர்பை அறிதல் - சுரமானி. | 425 |
| 10. | சுரமானியைப் பயன்படுத்தி மாறா அதிர்வெண்ணிற்கு கொடுக்கப்பட்ட கம்பியின் அதிர்வடையும் பிரிவின் நீளத்திற்கும் இழுவிசைக்கும் இடையேயான தொடர்பை அறிதல். | 428 |
| 11. | விசைகளின் இணைகர விதியை சரிபார்த்தல் (செய்து காட்டல் மட்டுமே தேர்விற்கு உரியதன்று). | |
| 12. | திருகு அளவி மற்றும் இயற்பியல் தராசினைக் கொண்டு கம்பிப் பொருளின் அடர்த்தியைக் காணல் (செய்து காட்டல் மட்டுமே தேர்விற்கு உரியதன்று) . | |


**குறிப்பு :** ஒவ்வொரு அலகின் இறுதியிலும் வடிவமைக்கப்பட்டுள்ள இணையவழிச் செயல்பாடுகளை செய்து பார்க்க மாணவர்களை வலியுறுத்த வேண்டும். (செய்து காட்டல் மட்டுமே தேர்விற்கு உரியதன்று).



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores



# 4. தனி ஊசலைப் பயன்படுத்தி புவிஈர்ப்பு முடுக்கம் காணல்

**நோக்கம்** : தனி ஊசலைப் பயன்படுத்தி புவிஈர்ப்பு முடுக்கத்தைக் கணக்கிடுதல்.

**தேவையான உபகரணங்கள்** : தாங்கி, ஊசல்குண்டு, நூல், அளவுகோல், நிறுத்துக் கடிகாரம்.

**வாய்ப்பாடு** : புவிஈர்ப்பு முடுக்கம் $g = 4\pi^2 \left(\frac{L}{T^2}\right)$ $(ms^{-2})$

இங்கு $T \rightarrow$ என்பது தனி ஊசலின் அலைவுநேரம் (s)

$g \rightarrow$ என்பது புவிஈர்ப்பு முடுக்கம் $(ms^{-2})$

$L \rightarrow$ தனிஊசலின் நீளம் (m)

**விளக்கப்படம்** :




**செய்முறை**

- ஒரு சிறிய பித்தளைக்குண்டினை நூலில் இணைக்கவும்.
- இந்த நூலானது தாங்கியுடன் பொருத்தப்படுகிறது.
- நூலின் மேற்பகுதியிலிருந்து ஊசல்குண்டின் மையப்பகுதிவரை உள்ள நீளம் அளவிடப்படுகிறது. கீழ்க்காணும் அட்டவணையில் ஊசலின் நீளமானது பதிவிடப்படுகிறது.
- நிறுத்துக் கடிகாரத்தைக் கொண்டு 10 அலைவுகளுக்கான நேரம் ($t$) குறிக்கப்படுகிறது.
- அலைவுக்காலம் $T = \left(\frac{t}{10}\right)$.
- ஊசலின் வெவ்வேறு நீளங்களுக்கு (L) சோதனை மீண்டும் செய்யப்படுகிறது. கொடுக்கப்பட்ட வாய்ப்பாட்டினைப் பயன்படுத்தி புவிஈர்ப்பு முடுக்கம் ($g$) கண்டறியப்படுகிறது.

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores



## 8. கலோரிமானியைக் கொண்டு நியூட்டனின் குளிர்வு விதியை சரிபார்த்தல்

**நோக்கம்** : வெப்பப்படுத்தப்பட்ட பொருளின் வெப்பநிலைக்கும் நேரத்திற்கும் இடையேயான தொடர்பினைப் பெறுதல்

**தேவையான உபகரணங்கள்** : கலக்கியுடன் கூடிய ஒரு கலோரிமானி, ஒரு துளையிடப்பட்ட இரப்பர் தக்கை, வெப்பநிலைமானி, நிறுத்துக் கடிகாரம், சூடேற்றும் சாதனம், நீர் பற்றுக்கருவி மற்றும் தாங்கி

**நியூட்டன் குளிர்வு விதி** : உயர்வெப்பநிலையில் உள்ள ஒரு பொருள் வெப்பத்தை இழக்கும் வீதம் அப்பொருளுக்கும் சுற்றுப்புறச் சூழலுக்கும் இடையிலுள்ள வெப்பநிலை வேறுபாட்டிற்கு நேர்த்தகவில் இருக்கும்.

$$\frac{dT}{dt} \propto (T - T_0)$$

இங்கு $\frac{dT}{dt}$ → வெப்பத்தை இழக்கும் வீதம் (குளிர்வு வீதம்) ($^oC$)

$T$ → நீரின் வெப்பநிலை ($^oC$)

$T_0$ → அறை வெப்ப நிலை ($^oC$)

**விளக்கப்படம்** :



நியூட்டன் குளிர்வு விதி சோதனை அமைப்பு

**செய்முறை**

- வெப்பநிலைமானியைப் பயன்படுத்தி அறைவெப்பநிலை ($T_0$)ஐ குறித்துக் கொள்ளவேண்டும்.
- ஏறத்தாழ 90$^oC$ வெப்பநிலையில் உள்ள சூடான நீர் கலோரிமானியில் நிரப்பப்படுகிறது.
- ஒரு துளை கொண்ட இரப்பர் தக்கையினால் கலோரிமானி மூடப்படுகிறது.
- தக்கையில் உள்ள துளையின் வழியாக கலோரிமானிக்குள் ஒரு வெப்பநிலைமானியை சொருக வேண்டும்.
- நிறுத்துக் கடிகாரத்தை இயக்கி, 80$^oC$ முதல் ஒவ்வொரு ஒரு டிகிரி செல்சியஸ் வெப்பநிலைக் குறைவிற்கும் ஆகும் நேரம் உற்றுநோக்கப்படுகிறது.

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores



## செய்முறை

- சுரமானியை மேஜையின் மீது வைத்து அதனுடன் இணைக்கப்பட்ட கம்பியின் பள்ளம் தூய்மையாகவும் குறைந்த உராய்விலும் இருப்பதை உறுதி செய்தல் வேண்டும்.
- தெரிந்த அதிர்வெண் கொண்ட இசைக்கவையை இரப்பர் அட்டையால் தட்டி அதிர்வுறச் செய்ய வேண்டும், சுரமானி கம்பியை அதிர்வுறச் செய்து, இரு அதிர்வு ஒலிகளையும் ஒப்பிட வேண்டும்.
- ஒலியானது ஒரே அளவாக கேட்கும் வரை விளிம்புக்கட்டை Bயை நகர்த்தி அதிர்வடையும் பிரிவின் நீளத்தை சரி செய்ய வேண்டும்.
- எடைதாங்கியில், ஆரம்ப நிறை 1 kg ஐ ஏற்ற வேண்டும்.
- இறுதியாக சரி செய்தபிறகு AB கம்பியின் மையத்தில் சிறிய காகிதத்துண்டு (R) ஐ வைக்க வேண்டும்.
- இப்பொழுது இசைக்கவையை அதிர்வுறச் செய்து அதன் அடிப்பகுதியை விளிம்புக்கட்டை Aயின் மீது வைத்து விளிம்புக்கட்டை Bயைச் சரிசெய்து காகிதத்துண்டு ஒத்ததிர்வினால் கிளர்ந்துறச் செய்ய வேண்டும்.
- விளிம்புக்கட்டை A,B க்கிடையேயான நீளத்தை அளவிட வேண்டும். இந்த அளவானது இசைக்கவையின் அதிர்வெண்ணிற்கான அடிப்படைச் சுரமாகும்.
- நிறைத்தாங்கியில் 0.5 kg எடைகளை படிப்படியாக உயர்த்தி, அதே இசைக்கவைக்கு ஒவ்வொரு நிறைக்கும் ஒத்ததிர்வு நீளம் கணக்கிடப்படுகிறது.
- உற்றுநோக்கிய அளவீடுகள் பதியப்பட்டு அட்டவணைப்படுத்தப்படுகிறது.

## மாதிரி வரைபடம்




**இழுவிசை T(N) மற்றும் நீளம் ($l^2$ cm$^2$) க்கும் இடையேயான தொடர்பு**

## காட்சிப்பதிவுகள்

இசைக்கவையின் அதிர்வெண் = 256 Hz

**இழுவிசையுடன் ஒத்ததிர்வு நீள மாறுபாடு**

| வ.எண் | நிறை M (kg) | இழுவிசை T = Mg (N) | $\sqrt{T}$ | அதிர்வடையும் பிரிவின் நீளம் $l$ (m) | $\frac{\sqrt{T}}{l}$ |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 19.6 | 4.427 | 15.5 | 28.56 |
| 2 | 3 | 29.4 | 5.422 | 20.5 | 26.49 |
| 3 | 4 | 39.2 | 6.261 | 22.0 | 28.46 |

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores

11ஆம் வகுப்பு

# அரசு மாதிரி வினாத்தாள் - 2018

## இயற்பியல்

நேரம் : 2.30 மணி மொத்த மதிப்பெண்கள் : 70

### பகுதி-I

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**

**சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக:** [15 × 1 = 15]

1. பொருளொன்றின் நிறை 4.27 g மற்றும் அதன் பருமன் $1.3\ cm^3$ எனில், அப்பொருளின் அடர்த்தியின் முக்கிய எண்ணுருக்களின் எண்ணிகை
   (a) 1 (b) 2
   (c) 3 (d) 4

2. பின்வருவனவற்றுள் எந்த இயற்பியல் அளவுகள் ஒரே பரிமாண வாய்ப்பாட்டைப் பெற்றுள்ளன?
   (a) திருப்புவிசை மற்றும் செய்யப்பட்ட வேலை
   (b) ஆற்றல் மற்றும் கோண உந்தம்
   (c) விசை மற்றும் திருப்பு விசை
   (d) கோண உந்தம் மற்றும் நேர்க்கோட்டு உந்தம்

3. இரண்டு இயற்பியல் அளவுகளை வகுக்கும்போது (அதாவது $x = \frac{A}{B}$) கிடைக்கும் பின்னப்பிழையின் பெரும மதிப்பு
   (a) $\frac{\Delta x}{x} = \mp\left(\frac{\Delta A}{A} - \frac{\Delta B}{B}\right)$ (b) $\frac{\Delta x}{x} = \left(-\frac{\Delta A}{A} + \frac{\Delta B}{B}\right)$
   (c) $\frac{\Delta x}{x} = \left(\frac{\Delta A}{A} + \frac{\Delta B}{B}\right)$ (d) $\frac{\Delta x}{x} = \left(\frac{A}{\Delta A} + \frac{B}{\Delta B}\right)$

4. பின்வருவனவற்றுள் வெக்டர் $\vec{A} = \hat{i} + \hat{j} + \hat{k}$ இன் திசையில் செயல்படும் அலகு வெக்டர் எது?
   (a) $\hat{i} + \hat{j} + \hat{k}$ (b) $\frac{\hat{i} + \hat{j} + \hat{k}}{\sqrt{2}}$
   (c) $\frac{\hat{i} + \hat{j} + \hat{k}}{\sqrt{3}}$ (d) $\frac{\hat{i} + \hat{j} + \hat{k}}{\sqrt{6}}$

5. துகளின் நிலை வெக்டர் $\vec{r} = 3t^2\hat{i} + 5t\,\hat{j} + 9\hat{k}$ துகளின் முடுக்கம் என்ன?
   (a) $6\ m\ s^{-2}$ $\hat{i}$ திசையில் (b) $5\ m\ s^{-2}$ $\hat{j}$ திசையில்
   (c) $9\ m\ s^{-2}$ $\hat{k}$ திசையில் (d) சுழி

6. ஆரவெக்டர் $\vec{r}$ கொண்ட கிடைத்தள வட்டப்பாதையில் ω என்ற கோணத்திசை வேகத்தில் பொருளொன்று சுழற்றப்படுகிறது. வட்டப்பாதையில் ஏதேனும் ஒரு புள்ளியில் அப்பொருளின் திசைவேகம்
   (a) $v = r\omega$ (b) $v = \frac{\omega}{r}$
   (c) $v = \frac{r}{\omega}$ (d) $v = m\frac{\omega}{r}$

7. வேகமாகச் சென்று கொண்டிருக்கும் பேருந்து திடீரென்று நிறுத்தப்படும்போது அப்பேருந்தின் உள்ளே உள்ள பயணி முன்னோக்கித் தள்ளப்படுவதின் காரணம்
   (a) ஓய்வில் நிலைமம்
   (b) திசையில் நிலைமம்
   (c) நிலைமத்திருப்புத்திறன்
   (d) இயக்கத்தில் நிலைமம்

8. பொருளொன்றின் இயக்கத்தைப்பற்றி படிக்கும்போது, பொருளை தொடர்ந்து இயங்கவைப்பதைவிட, அப்பொருளை ஓய்வுநிலையிலிருந்து இயக்க நிலைக்கு மாற்றுவது கடினம். ஏனெனில் ஓய்வுநிலை உராய்வுக்குணகம் மற்றும் இயக்கநிலை உராய்வுக்குணகம் பின்வரும் நிபந்தனையை நிறைவு செய்கின்றன
   (a) $\mu_s > \mu_k$ (b) $\mu_s < \mu_k$
   (c) $\mu_s = \mu_k$ (d) $\mu_s = \frac{1}{2}\mu_k$

9. $m_1$ மற்றும் $m_2$ என்ற இரண்டு நிறைகள் சமவிசையை உணர்கின்றன எனில், அவற்றின் முடுக்கங்களின் விகிதம்.
   (a) $\frac{a_1}{a_2} = \frac{m_1}{m_2}$ (b) $\frac{a_1}{a_2} = 1$
   (c) $\frac{a_1}{a_2} = \frac{m_2}{m_1}$ (d) $\frac{a_1}{a_2} = \sqrt{\frac{m_1}{m_2}}$

10. $m$ நிறையுள்ள ஒரு பொருள் தரையிலிருந்து $h$ உயரத்திற்கு மாறா திசைவேகத்தில் எடுத்துச் செல்லப்பட்டால் ஈர்ப்பு விசையினால் செய்யப்பட்ட வேலை
    (a) W = mgh (b) W = –mgh
    (c) W = 0 (d) W = 2 mgh

11. செய்யப்பட்ட வேலை துகள் நகர்ந்த பாதையைச் சார்ந்திருக்கவில்லையெனில், அத்துகளின் மீது செயல்பட்ட விசை
    (a) ஆற்றல் மாற்றும் விசை
    (b) ஆற்றல் மாற்றா விசை
    (c) நியூட்டனின் விசை
    (d) மையவிலக்குவிசை



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net
This is only for Sample
www.TrbTnpsc.Com
for Full Book order Online and Available at All Leading Bookstores

11ஆம் வகுப்பு

# காலாண்டுப் பொதுத் தேர்வு, செப்டம்பர் – 2019

## இயற்பியல்

**நேரம் : 2.30 மணி** **மொத்த மதிப்பெண்கள் : 70**

**அறிவுரைகள்:** (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப் பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக் கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

### பகுதி - I

**குறிப்பு:** (1) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

(2) கொடுக்கப்பட்டுள்ள நான்கு மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

(15 × 1 = 15)

1. 0.003401 என்ற எண்ணின் முக்கிய எண்ணுரு

(a) 6 (b) 3
(c) 5 (d) 4

2. விசையானது திசைவேகத்தின் இருமடிக்கு நேர்விகித பொருத்தமுடையது எனில் விகித மாறிலியின் பரிமாண வாய்பாடு

(a) $[MLT^0]$ (b) $[MLT^{-1}]$
(c) $[ML^{-2}T]$ (d) $[ML^{-1}T^0]$

3. துகளொன்று எதிர்குறி திசைவேகத்தையும் எதிர்குறி முடுக்கத்தையும் பெற்றுள்ளது எனில் அத்துகளின் வேகம்

(a) அதிகரிக்கும் (b) குறையும்
(c) மாறாது (d) சுழி

4. ஒரு இயற்பியல் அளவு $x = \frac{a^2\sqrt{b}}{c^3}$ கொடுக்கப்பட்டுள்ளது. a, b மற்றும் c ஐ அளவிடுதலில் ஏற்படும் விழுக்காட்டுப் பிழைகள் முறையே 3%, 2% மற்றும் 1% எனில் $x$ ன் விழுக்காட்டுப்பிழை

(a) 5% (b) 10%
(c) 8% (d) 6%

5. ஒரு கட்டிடத்தின் உச்சியிலிருந்து செங்குத்தாக கீழ்நோக்கி எறியப்படும் பொருள் ஒன்று தரையை அடைய 2 வினாடி காலம் எடுத்துக்கொள்கிறது எனில் கட்டிடத்தின் உயரம் ($g = 10\ ms^{-2}$)

(a) 10 m (b) 16 m
(c) 20 m (d) 25 m

6. படத்தில் காட்டியவாறு வழுவழுப்பான கிடைத்தள பரப்பில் m மற்றும் 2m நிறைகள் வைக்கப்பட்டுள்ளன. முதல் நிலையில் $F_1$ விசை இடப்புறத்திலிருந்து செயல்படுத்தப்படுகிறது. பிறகு $F_2$ விசை மட்டும் வலப்புறத்திலிருந்து செயல்படுத்தப்படுகிறது. பொருள்கள் ஒன்றையொன்று தொடும் பரப்பில் இரு நிலைகளிலும் சமவிசைகள் செயல்படுகின்றன எனில் $F_1 : F_2$.




(a) 1 : 1 (b) 1 : 2
(c) 2 : 1 (d) 1 : 3

7. ஆரம் 10 m மற்றும் நிலை உராய்வு குணகம் 0.81 கொண்ட சரிசமமான வட்டச்சாலை ஒன்றை கருதுக. அச்சாலையில் மூன்று கார்கள் (A, B மற்றும் C) முறையே $7\ ms^{-1}$, $8\ ms^{-1}$, $10\ ms^{-1}$ வேகத்தில் செல்கின்றன. இவற்றுள் எந்த கார் வட்ட வடிவச்சாலையில் செல்லும்போது வழுக்கிவிழும்? ($g=10\ ms^{-2}$)

(a) A (b) B
(c) C (d) B மற்றும் C

8. மையவிலக்கு விசை எங்கு ஏற்படும்?_________

(a) நிலைமைக் குறிப்பாயங்களில் மட்டும்
(b) சுழல் இயக்கு குறிப்பாயங்களில் மட்டும்
(c) எந்த ஒரு முடுக்கமடையும் குறிப்பாயத்திலும்
(d) நிலைம, நிலைமமற்ற குறிப்பாயம்



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores

11ஆம் வகுப்பு

# பொதுத்தேர்வு மார்ச் – 2020

## இயற்பியல்

**கால அளவு : 3.00 மணி நேரம்** **மொத்த மதிப்பெண்கள் : 70**

### பகுதி-I

**குறிப்பு : (i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **[15 × 1 = 15]**

**(ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினை சேர்த்து எழுதவும்.**

1. வளைவுச் சாலை ஒன்றில் கார் ஒன்று திடீரென்று இடது புறமாகத் திரும்பும் போது அக்காரிலுள்ள பயணிகள் வலது புறமாகத் தள்ளப்படுவதற்கு, பின்வருவனவற்றுள் எது காரணமாக அமையும்?
   (அ) நிலைமமற்ற தன்மை (ஆ) திசையில் நிலைமம்
   (இ) இயக்கத்தில் நிலைமம் (ஈ) ஓய்வில் நிலைமம்

2. k என்ற விசைமாறிலி கொண்ட ஒரு சுருள்வில் ஒருதுண்டு மற்றொன்றை விட இருமடங்கு நீளம் உள்ளவாறு இரு துண்டுகளாக வெட்டப்படுகிறது. நீளமான துண்டு பெற்றுள்ள விசை மாறிலியானது
   (அ) 6k (ஆ) $\frac{2}{3}$ k
   (இ) $\frac{3}{2}$ k (ஈ) 3 k

3. பொருளொன்றின் நீளம் 3.51 m என அளவிடப்பட்டுள்ளது. துல்லியத்தன்மை 0.01 m எனில், அளவீட்டின் விழுக்காட்டுப்பிழை
   (அ) 0.035% (ஆ) 351%
   (இ) 1 % (ஈ) 0.28%

4. கீழ்க்காணும் அளவுகளில் எது ஸ்கேலார்?
   (அ) வேகம் (ஆ) திசைவேகம்
   (இ) இடப்பெயர்ச்சி (ஈ) நேர்க்கோட்டு உந்தம்

5. புவிக்கும் சூரியனுக்குமிடையே உள்ள தொலைவு இருமடங்கானால், ஓராண்டு என்பது எத்தனை நாட்கள்?
   (அ) 730 (ஆ) 1032
   (இ) 64.5 (ஈ) 182.5

6. கொடுக்கப்பட்ட P-V வரைபடத்தில் அழுத்தம் மாறா அமுக்க நிகழ்வைக் குறிப்பது எது?

(அ) 


(ஆ) 


(இ) 


(ஈ) 


7. ஒருமுனை மூடிய காற்றுத் தம்பம் ஒன்று 83 Hz அதிர்வெண் உடைய அதிர்வுறும் பொருளுடன் ஒத்ததிர்வு அடைகிறது எனில், காற்றுத் தம்பத்தின் நீளம்: (காற்றில் ஒலியின் திசைவேகம் = 332 $ms^{-1}$)
   (அ) 1.5 m (ஆ) 0.5 m
   (இ) 2.0 m (ஈ) 1.0 m

8. பின்வருவனவற்றுள் எது ஓரலகு வெக்டர்?
   (அ) $\frac{\hat{i}+\hat{j}}{\sqrt{2}}$ (ஆ) $\hat{i}+\hat{j}$
   (இ) $\frac{\hat{i}}{\sqrt{2}}$ (ஈ) $\hat{k}-\frac{\hat{j}}{\sqrt{2}}$

9. நிலைமத் திருப்புத்திறனின் பரிமாண வாய்ப்பாடு
   (அ) $ML^{-1}T^{-1}$ (ஆ) $ML^2T^{-2}$
   (இ) $MLT^2$ (ஈ) $ML^2$

10. 20 kg நிறையுடைய ஒரு பொருள் 10 $ms^{-1}$ வேகத்தில் வழுவழுப்பான ஒரு கிடைத்தள பரப்பில் இயங்கிக் கொண்டிருக்கும் போது சுருள் மாறிலி 5 N/m கொண்ட ஒரு நிறையற்ற சுருள் வில்லோடு மோதுகிறது. மோதிய பின் அந்த நிறையின் இயக்கம் நின்று விடுகிறது எனில், சுருள்வில்லின் அமுக்கப்பட்ட தொலைவு என்ன?
   (அ) 10 m (ஆ) 50 m
   (இ) 5 m (ஈ) 20 m

11. மனித செவி உணரக்கூடிய அலைநீள நெடுக்கம் (காற்றில் ஒலியின் திசைவேகம் = 340 $ms^{-1}$)
   (அ) 17 m முதல் 170 m
   (ஆ) 0.17 m முதல் 17 m
   (இ) 0.017 m முதல் 17 m
   (ஈ) 1.7 m முதல் 17 m



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com